


சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி.யின் புதல்வி அபிநயா – ஹரிஹரன் ஆகியோரின் மணவிழாவை, மே 25 அன்று தேவகோட்டையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் வே.ஆனந்தம் எம்.சி., கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்கு, தமது சொந்தப் பொறுப்பில் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையினை கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், எஸ்.ரகுபதி, மா.சுப்பிரமணியன், சிவ.வீ.மெய்யநாதன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த அனுமதி!

# பிரதமர் நரேந்திர மோடிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

'தமிழ்ப் பண்பாட்டையும் விருந்தோம்பலையும் பறைசாற்றுவோம்!" என சமூக வலைதளப் பதிவு!

டோக்கியோ, மே.29-

'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த அனுமதி வழங்கிய பிரதமர் அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**2023ஆம் ஆண்டு 'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்த வேண்டும் என்ற எனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டதற்காக பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி.**

**அனைத்து இந்திய மாநிலங்களைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் தங்கள் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்த இது ஒரு தளமாக விளங்கும். 44ஆவது செஸ் ஒலிம்பியாட்டின் போது அனைவரும் கண்டது போல, 'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளையும் தமிழ்நாடு மிக விமரிசையாக நடத்தி, தமிழ்ப் பண்பாட்டையும் விருந்தோம்பலையும் பறைசாற்றும்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநர் தன்னிச்சையாகவே செயல்படுகிறார்! தமிழ்மொழி மீது அக்கறை இருந்தால்

# மும்மொழிக் கொள்கையை எதிர்க்கத் தயாரா?

## அண்ணாமலைக்கு அமைச்சர் க.பொன்முடி காட்டமான பதிலடி!

**விழுப்புரம், மே 29 -**

**"மும்மொழிக் கொள்கையை அண்ணாமலை எதிர்க்கத் தயாரா? நான் நேருக்கு நேர் விவாதிக்கத் தயார்!" என்று அமைச்சர் க.பொன்முடி தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணா மலைக்கு சவால் விடுத்துள்ளார்.**

**இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:-**



பா.ஜ.க. அண்ணாமலை அவர்களை நான் நேரடியாகக் கேட்கிறேன். தமிழ் வளர்ச்சிக்கு யார் காரணம்? மும்மொழிக் கொள்கையை அவர் எதிர்க்கத் தயாரா? அவர் சென்னையில் எந்த இடத்தில் சொல்கிறாரோ அதே இடத்தில் நேருக்கு நேர் விவாதிக்க நான் தயாராக இருக்கிறேன் அதை பொதுக்கூட்டமாகவோ இல்லை பட்டிமன்றமாகவோ வைத்து பேசுவதற்கு நான் தயாராக இருக்கி றேன் . அவர் தயாரா எனக் கேட்டுச் சொல்லுங்கள் .

அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழ் வழி கல்வி நிறுத்தப்பட்டுள்ளது அது அரசாங்கத்திற்கு தெரியாதா? என கேள்வி எழுப்பினார். உண்மையாகவே அரசாங்கத்துக்கு தெரியாது. ஆளுநருக்கு தான் தெரியும். அவர்தான் ஆளுநர் உடன் மிக நெருக்கமாக இருக்கிறாரே அவரே கேட்டு சொல்லட்டும் துணைவேந்தர்கள் எல்லாம் அழைத்து கூட்டம் போட்டுள்ளார் ஆளுநர், ஆனால் நான் இணைவேந்தராக இருக்கிறேன் எனக்கு எந்தவித தகவலும் அளிக்கவில்லை. ஏன் அளிக்க வில்லை என அண்ணாமலை ஆளுநரை கேட்டு சொல்லட்டும். ஆளுநருக்கு அவர்தான் மிக நெருக்கமானவர். அவரைக் கேட்டு சொல்லட்டும்.

உண்மையாகவே அந்த கூட்டத்திற்கு எனக்கும் தகவல் வரவில்லை, உயர்கல்வி துறை செயலர் அவர்களுக்கும் தகவல் வரவில்லை. ஆளுநர் எப்போதும் தன்னிச்சையாகவே செயல்படுகிறார். அது எனக்கு மட்டுமல்ல; செய்தியாளர்களாகிய உங்களுக்கும் தெரியும், மக்களுக்கும் தெரியும். துணைவேந்த ர்களுக்கான கூட்டம் சுற்றறிக்கை மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கை இணைவேந்தராக இருக்கும் எனக்கும் வரவில்லை. உயர் கல்வித் துறையின் செயல ருக்கும் வரவில்லை. அண்ணாமலை கேட்கிறாரே இதெல்லாம் அரசாங்கத் தெரியாமலா நடக்கிறது, உண்மை இதெல்லாம் அரசாங்கத்திற்கு தெரியாமல்தான் நடக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் மாநில கல்விக் கொள்கை குறித்து ஒரு குழு அமைத்துள்ளார் அந்த குழுவின் அறிக்கை விரைவில் வரவிருக்கிறது. இதனை கவனத்தில் கொண்டு ஆளுநர் அவர்கள் துணை வேந்தர்களை அழைத்து புதிய கல்விக் கொள்கை குறித்து அவர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக அரசை கலக்காமல் இவ்வாறு கூட்டம் போடுவது யார்? எதற்காக? என்று அண்ணாமலைக்கு தெரியாதா அவர்தான் மிக ஆளுநர் உடன் மிக நெருக்கமாக இருக்கிறார். அண்ணாமலை அவர்களுக்கு கரண்ட் பாலிடிக்சும் தெரியவில்லை, பழைய வரலாறும் தெரியவில்லை. இவர் எப்படி ஐபிஎஸ் ஆனார் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

திமுக எம்எல்ஏ பரந்தாமன் சிண்டிகேட் உறுப்பினராக இருக்கிறாரே அவர் மூலமாக இவர்களுக்கு தெரிந்திருக்கலாமே என அண்ணாமலை கேள்வி எழுப்பினார். ஏங்க ஒரு ஐ.பி.எ.ஸ் அதிகாரியாக இருந்திருக்காரு இது கூட அவருக்கு தெரியலையே கடைசி சிண்டிகேட் கூட்டம் 20 ஏப்ரல் அன்று நடத்தப்பட்டது. அதில் கூட இவை ஒரு பொருளாக வைத்து கூட்டம் நடத்தப்பட வில்லை.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு அண்ணாமலை ரொம்ப பாடுபடுவது போல் அறிக்கை விடுத்துள்ளார். அவர் போய் புதிய கல்விக் கொள்கையில் மூன்றா வது மொழி திணிப்பதை நிறுத்த வேண்டுமென ஆளுநரிடம் முறையிடட்டும். தமிழ் வளர்ச்சிக்கு திராவிட மாடல் ஆட்சிதான் காரணம். கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதும், அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதும் யாரால் நடந்தது. திராவிட மாடல் ஆட்சிதான் என அண்ணாமலைக்கு தெரியாதா? வரலாறை அவர் சரியாக தெரிந்து கொண்டு பேச வேண்டும். அண்ணாமலைக்கு மிகவும் தமிழ் மொழி மீது அக்கறை இருந்தால் கோவில்களில் போய் தமிழில் அர்ச்சனை செய்யுங்கள் என அனைத்து கோயில்களிலும் போய் சொல்லட்டும். அந்த காலத்திலிருந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கும் மொழி போரை முன்னெடுத்துச் சென்றது தி.மு.க. மற்றும் திராவிட மாடல் ஆட்சி தான். சி.பி.எஸ்.இ படிப்புகளில் தமிழ் மொழியை கட்டாயமாக சொல்லுங்கள் அப்படி ஆக்கினால் தமிழ் மொழி மீது இவர்களுக்கு அக்கறை உள்ளது என ஏற்றுக்கொள்கிறேன். தமிழ் மொழியை சி.பி.எஸ்.இ படிப்புகளில் விருப்ப பாடமாகத்தான் தான் வைத்துள்ளார்கள்.

புதிய கல்விக் கொள்கையில் உள்ள நல்லவற்றை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் மூன்றாவது ஒரு மொழியை கட்டாயமாக்கி திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசுக்கு தெரியாமல்தான் பல்கலைக்கழகங்கள் சில முடிவுகளை எடுக்கின்றன புதிய கல்விக் கொள்கையில் மூன்றாவது, ஐந்தாவது, எட்டாவது போன்ற வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு என்று உள்ளது, அப்படி பொதுத் தேர்வு எழுதினால் மாணவர்கள் அடுத்த கட்ட படிப்புகளுக்கு செல்லாமல் இடைநிற்றல் அதிகமாகும். இப்படிப்பட்ட கொள்கைகளை நாங்கள் எதிர்க்கிறோம் .

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் படிக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் எனவும் தற்போது முதலமைச்சர் அவர்கள் சிங்கப்பூர் , ஜப்பான் போன்ற நாடுகளில் சென்று பன்னாட்டுக் கல்வியை வளர்க்க வேண்டும், தொழில் துறையை வளர்க்க வேண்டும் என முதலீட்டாளர்களை சந்தித்து வருகிறார். மற்ற மொழிகளை படிப்பதை நாங்கள் எப்போதும் வேண்டாம் என்று சொல்வதில்லை. அந்த மூன்றாவது மொழி திணிப்பதைதான் நாங்கள் எதிர்க்கிறோம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், அவர் வழியில் தற்போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார்.

நீங்கள் இந்தி மொழியை கட்டாய மொழியாக திணிக்க முடியாது. புதிய கல்விக் கொள்கை திட்டத்தில் தமிழ் மொழிக்காக நாங்கள் பல்வேறு திட்டங்களை கொண்டு வந்தோம் என்று அண்ணாமலை அவர்கள் தெரிவித்துள்ளார். என்ன கொண்டு வந்துள்ளார் என்பதை நான் அவரோடு நேரடியாக விவாதிக்க தயார். அவரும் தயாரா? சென்னையில் சொல்லுங்கள் எந்த இடமாக இருந்தாலும் சொல்லுங்கள் அது பட்டிமன்றம் ஆகவோ அல்லதுபொதுக்கூட்டமாகவோ நான் அவரோடு விவாதிக்க தயார்.

இவ்வாறு உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறினார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை

# நாகை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை, மே 29-

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்சசிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 13 முறையும் வெற்றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், 50 ஆண்டுகாலம் கழகத் தலைவர், பல இந்திய குடியரசுத் தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழிகாட்டியாக, 60 ஆண்டுகாலம் வரைப்படத்துறை, பத்திரிக்கைத் துறை, இலக்கியம், நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சி காலத்தில் தமிழ் மொழியை செம்மொழியாக்கி, காவிரி நடுவர் மன்றம் அமைத்தும், தனியார் பேருந்துகளை அரசுடமையாக்கி அரசு போக்குவரத்து கழகத்தை உருவாக்கியவர்.

நமது நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை கடந்த 16.5.2023 அன்று நாகை மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் படி வரும் ஜூன் 3ம் தேதி அன்று மற்றும் 3.6.2023 முதல் ஓராண்டுக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவை நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள அனைத்து கிளைகள், வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும்,



இரத்ததான முகாம், மருத்துவ முகாம்கள் நடத்தியும், பொதுக்கூட்டம், தெரு முனை பிரச்சார கூட்டம் ஆகியவற்றை நடத்தி சிறப்பாக கொண்டாடுவது என்றும், இந்நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தங்கள் பகுதியில் நடைபெறும் கலைஞர் பிறந்த நாள், நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியில் உள்ள கிளை, வார்டுக் கழகச் செயலாளருக்கு கலைஞர் பிறந்த நாள் மற்றும் நூற்றாண்டு விழா அனைத்து பகு யிலும் சிறப்பாக கொண்டாடிட உரிய ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழக செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாக்களில்

# தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்போம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சை, மே 29-

தஞ்சை வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் 27.05.2023 சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் க.நஷீர் முகமது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜீன்3 தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம், வட சென்னையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். அப்பொதுக்கூட்டத்திற்கு தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் அதிக அளவில் கழக தொண்டர்களை வாகனங்களில் அழைத்து சென்று திரளாக பங்கேற்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

ஜீன்20 திருவாரூரில் கலைஞர் கோட்டம் சிறப்பு விழாவில் பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்கள் திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார். இந்த விழா நாள் முழுவதும் கவியரங்கம், பட்டிமன்றம் மாபெரும் பொதுக்கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற இருப்பதால் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி, வார்டு, ஊராட்சி கிளை கழகங்களிலிருந்து அதிக அளவில் தொண்டர்களை பங்கேற்க செய்வது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தமிழே உயிராக தமிழினமே உணர்வாக தமிழக நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாக கொண்ட 80 ஆண்டுகால பொதுவாழ்வுக்கு சொந்தக்காரர் ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர் அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர். இலக்கியம், கவிதை, இதழியல், நாடகம், திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகதிறன் கொண்ட படைப்பாளர் திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து உலகமெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 2023 ஜீன் 3ம் நாள் தொடங்குவதால் ஓராண்டு முழுவதும் தொடர்ந்து நிகழ்ச்சிகள் திட்டமிட்டு கலைஞரின் சாதனைகள் மக்கள் மனதில் பதியச் செய்யும் வகையிலும் நலத்திட்டங்கள் ஏழை எளியோர்களுக்கு உதவிகள் மற்றும் என்றென்றும் கலைஞர் எனும் தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் தொடர்ந்து 100 பொதுக்கூட்டங்கள் நடத்துவது என இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

இந்தியாவே திரும்பி பார்க்கின்ற வகையில் திராவிட மாடல் ஆட்சி செய்து வருகிற கழக தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசியல் முன் எடுப்புகளை இந்திய அளவில் எடுத்து செல்ல வர இருக்கிற 2024 நாடாளு மன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற செய்ய அயராது பாடுபட வேண்டுமாய் கழக தோழர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களால் அரைநூற்றாண்டு காலம் கட்டிக்காத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த ஒரு கோடி உறுப்பினர் சேர்க்க உடன்பிறப்புகளாய் இணைவோம் என்று மாபெரும் முன்னெடுப்பின் படி கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்டுள்ள இந்த திட்டத்தின்படி மாநாகர, வட்ட கழக, ஒன்றிய, பேரூர் கழக கிளை கழக நிர்வாகிகள் உடனடியாக தங்களிடம் வழங்கப்பட்டுள்ள உறுப்பினர் படிவங்களை இல்லங்கள் தோறும் தேடி சென்றும் திண்ணை பிரச்சாரம் செய்தும் முக்கிய இடங்களில் முகாம் அமைத்து பொதுமக்களையும், இளைஞர்களையும் கழக உறுப்பினர்களாக சேர்ப்பது என்று ஏற்கனவே கூட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டதின்படி தொகுதிக்கு 50,000 வீதம் உறுப்பினர்களுக்கும் சேர்க்கப்பட வேண்டும். இலக்கை முழுமையாக அடைய முழு மூச்சுடன் செயல்பட்டு மீதமுள்ள படிவங்களில் உறுப்பினர்களை சேர்த்து பூர்த்தி செய்து நமக்கான இலக்கை வெற்றிகரமாக அடைவதுடன் அப்படிவங்களை மாவட்ட கழகத்திடம் உடனடியாக வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

சிவகங்கை மாவட்ட இளைஞரணி சார்பில்

# கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## நாகனி செந்தில்குமார் அறிவிப்பு!

சிவகங்கை, மே 29 -

சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சி கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு சாதனைகளை செய்து வருகிறது. ஈடில்லாஆட்சி ஈராண்டே சாட்சி என்று மக்கள் பாராட்டும் வகையில் நடைபெறும் கழக அரசின் சாதனைகளை மக்களுக்கு எடுத்து கூறும் வகையில் கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

அவரது உத்தரவின் பேரிலும் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன், மாநில இலக்கிய அணிப் புரவலரும், முன்னாள் அமைச்சருமான மு.தென்னவன் ஆலோசனையின்பேரில் 28ம் தேதி முதல் 31ம் தேதி முடிய மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் 35க்கும் மேற்பட்ட தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற உள்ளது. எனவே அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பான முறையில் தெருமுனை பிரச்சார கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் இடங்கள்.

29.5.2023 - திங்கட்கிழமை சிவகங்கை நகர் வி. பி.ராஜன் முன்னாள் எம். எல்.ஏ. தேவகோட்டை, காரைக்குடி நகரம், புதுக்கோட்டை விஜயா தலைமைக் கழக பேச்சாளர். சிவகங்கை தெற்கு,வடக்கு, ஒன்றியம். வழக்கறிஞர் அ. கணேசன் தலைமைக் கழக பேச்சாளர்.

இத்தகவலை நாகனி செந்தில் குமார் தெரிவித்துள்ளார்.

'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!

